வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.4690/இ2/2019 நாள் 03.07.2019

---

பொருள் : பள்ளிக் கல்வி – தொழிற்கல்வி – கணினி பயிற்றுநர் நிலை I – பணியிடங்கள் தோற்றுவித்தது – கணினி பயிற்றுநர் மற்றும் தொழிற்கல்வி ஆசிரியர் நிலை (கணினி அறிவியல்) பணிபுரிபவர்கள் – 8 ஆண்டுகள் பணி முடித்தவர்களை கணினி பயிற்றுநர் நிலை Iஆக – பதவி உயர்வு வழங்குதல் – உத்தேச பெயர் பட்டியல் தயாரித்தல் – தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விவரங்கள் கோருதல் – சார்பு.

பார்வை : 1. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8095/வி1/இ2/2019, நாள் 27.06.2019
2. அரசாணை (நிலை) எண்.26, பள்ளிக் கல்வி (ப.க7(1)த் துறை நாள் 12.02.2019

---

வேலூர் மாவட்டம், அரசு / நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் கணினி பயிற்றுநர் நிலையில் உள்ளவர்களில் 8 ஆண்டுகள் பணி முடித்தவர்கள் கணினி பயிற்றுநர் நிலை–I (Post Graduate Cadre) பணியிடங்களை (With the Minimum Educational Qualifications Based on NCTE Norms) கொண்டு பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்திட பார்வை (1)ல் காணும் அரசாணையில் பத்தி–1ல் தெரிவிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகள் பெற்றிருக்க வேண்டும். கணினி பயிற்றுநர் நிலை–I பணியிடங்களுக்கு ரூ.9300–34800+4800 தர ஊதியம் (Pre – Revised Scale ) (Level 18, Rs.36900 – 1,16,600) (Revised Scale ) என்ற ஊதிய ஏற்ற முறையில் ஊதியம் பெற ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. பார்வை (2)ல் காணும் அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியுள்ள தகுதி வாய்ந்தவர்கள் கருத்துருவினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் அறிவுரைகளை பின்பற்றி பூர்த்தி செய்து 08.07.2019 அன்று மாலை 5.00 மணிக்குள் பூர்த்தி செய்து இவ்வலுவலகத்திற்கு சார்ந்த பணியாளர் நேரில் வந்து அளிக்குமாறு சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1) அறிவுரைகள்
2) Annexures – I & II
3) படிவங்கள் 1 மற்றும் 2

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள்,
அரசு / நகராட்சி மேல்நிலைப்பள்ளி,
வேலூர் மாவட்டம்.

அ.சு